**07.11.2022**

**OS.No. 246/2015 PW : 1, திரு. கந்தசாமி**

**1, 4 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி...**

என்னுடைய வயது 70. விவசாயம் செய்து வருகிறேன். பூண்டி பகுதியில் அ.இ.அ.தி.மு.க.வில் நான் ஒரு முக்கிய பொறுப்பாளர் ஆவேன். 2ம் வாதியான சரோஜா என் சகோதரி. 3ம் வாதியும் என் சகோதரி. 2ம் வாதி இறந்துவிட்டார். அவரது வாரிகள் தான் 4 முதல் 8 வாதிகள். என் தம்பி பெயர் சந்திரன். அவரின் மனைவி 1ம் பிரதிவாதி. 1ம் பிரதிவாதியின் பூர்வீகம் பாண்டிச்சேரி ஆகும். 2, 3 பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் சகோதரர்கள். வழக்கு நிலுவையில் இருந்தபோது 2, 3 பிரதிவாதிகள் இறந்துவிட்டார்கள். அவரின் வாரிசுகள் 4 முதல் 11 பிரதிவாதிகள் ஆவார்கள். சொத்தில் பாகம் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்தேன். 1ம் பிரதிவாதி பாண்டிச்சேரியில் பெரிய குடும்பத்தை சேர்ந்தவர் தான். 1ம் பிரதிவாதி என் தம்பியை திருமணம் செய்து வந்தபோது 500 சவரன் நகையுடன் வந்தார் என்றால் சரியல்ல. 50 சவரன் நகையுடன் வந்தார். நான் வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் நெய்வேலி என்ற கிராமத்தில் இருக்கிறது. தாவா சொத்துக்கள் போக எங்கள் குடும்பத்திற்கு வேறு சொத்துக்கள் இல்லை. என் தந்தை பெயர் ஏழுமலை செட்டியார். பார்வதியம்மாள் என் தாயார். அவர் 20 வருடத்திற்கு முன்பு காலமாகிவிட்டார். என் சகோதரர் சந்திரன் 19.07.2011ல் காலமானார். எதிர்வழக்குரையில் சில சொத்துக்கள் விடுபட்டுள்ளதாக சொல்லப்பட்ட பின்னர்

அதை சேர்ப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுத்தோமா என்று கேட்டால் எதிர்வழக்குரையில் கண்டுள்ள விவரங்கள் உண்மையானதாக இல்லாததால் நடவடிக்கை எடுக்கவில்லை. நெய்வேலியில் வீட்டுமனை இருக்கிறது. அது பொதுகுடும்ப சொத்தாகும். கண்ணியம்மா பேட்டையில் உள்ள வீடு என் சொந்த வீடாகும். மோவூர் கிராமத்தில் சர்வே எண்14/1பி-ல், 70 சென்ட், சர்வேஎண்14/2ஏ1, 0.35.5 ஏர் எங்கள் குடும்பத்திற்கு சுமார் 70 சென்ட் சொத்து இருக்கிறது என்று கேட்டால் இருக்கலாம். சர்வே எண் 15/2ல் 0.2.5 ஏர்ஸ், சர்வே எண்15/4ல் 5 சென்ட், சர்வே எண்15/6ல் 15 சென்ட், சர்வே எண்16/5ல் 54 சென்ட் எங்கள் குடும்பத்தில் இருக்கிறதா என்று கேட்டால் அவ்விதம் இல்லை. 2ம் வாதிக்கு திருமணம் ஆகி சுமார் 30 வருடம் இருக்கும். 3ம் வாதிக்கு திருமணம் ஆகி 20 வருடம் இருக்கும். 3ம் வாதிக்கு 1981ல் திருமணம் ஆனதா என்று கேட்டால் எனக்கு ஞாபகமில்லை சுமார் 20 வருடம் இருக்கும். 2, 3 பிரதிவாதிகளை இவ்வழக்கில் ஏன் சேர்த்தேன் என்று கேட்டால் நான் அவ்விதம் சேர்க்கவில்லை. எங்கள் தரப்பில் 07.04.2015 தேதியிட்ட பட்டாவை மட்டும் தாக்கல் செய்திருக்கிறோம். வேறு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.